# நுவரெலியா மாநகர சபை
# நுவரெலியா மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2013 பெப்ரவரி 28 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 மார்ச் 28 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஜூலை 17 ஆந் திகதியன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, நுவரெலியா மாநகர சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நுவரெலியா மாநகர சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு நியமங்களும் கொள்கைகளும்

சபையின் நிதிசார் கூற்றுக்கள் இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசச துறை கணக்கீட்டு நியமம் 01 க்கமைய 2012 ஜனவரி 01 க்கு முன்னர் இருந்த காணி மற்றும் கட்டிடங்களது பெறுமதி நிதிசார் கூற்றுக்களில் வெளிக்கொணரப்படவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமாப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 91,866,457 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 65,478,234 ஆகும்.

### 2.2 வருவாய் நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா000 | ரூபா | ரூபா000 |
| (i) | தீர்வையும் வரியும் | 99,931 | 39,990 | 59,941 |
| (ii) | குத்தகை வாடகை | 41,954 | 15,093 | 26,861 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 7,307 | 5,464 | 1,843 |
| (iv) | பிற வருவாய் | 59,008 | 41,358 | 17,650 |

#### 2.2.2 தீர்வையும் வரியும்

(அ) 2008 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட தீர்வை வரி என்பவற்றிளது மதிப்பீட்டையடுத்து சபை அங்கீகரித்த 297 கட்டிட விண்ணப்பப் படிவங்கள் தொடர்பாக முறையாக நிர்மாண வேலையைப் பூர்த்தி செய்ததன் பின்னர் 36 நிர்மாண வேலைகளுக்கு மாத்திரமே இணைக்கச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன. ஏனைய 261 நிர்மாண வேலைகள் தொடர்பான கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின்போது அநேக கட்டிடங்கள் சுற்றுலாத் துறைக்கும் விடுதிகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டவாறு இருந்தமை

விதிக்கப்பட்ட தண்டப் பணத்திற்கமைய 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த தண்டப் பணம் ரூபா 919,559 ஆகும்.

## 2.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 188 (1) ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக, 2011 ஆம் ஆண்டில் பொருட் கணிப்பை மேற்கொண்ட உத்தியோகத்தர்களை உபசரிப்பதற்காக ரூபா 55,645 மற்றும் மரணமடைந்த சபை ஊழியர் ஒருவரது மரணச் சடங்குகளுக்கு ரூபா 21,000 என சபையின் நிதியிலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.3 க்கமைய, வழங்கப்படக் கூடிய அதி கூடிய முற்பணம் 20% ஆகும். அதற்கு முரணாக, அயன் கெட்டர்பிலர் இயந்திரம் ஒன்றைப் பழுதுபார்பபதற்கு குறித்த மதிப்பீட்டில் 75 சதவீதமாகிய ரூபா 2,636,530 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 2.5 ஒப்பந்த நிர்வாகம்

### 2.5.1 விக்டோரியா சிறுவர் பூங்காவில் மின்சாரப் புகையிரதத்தை நிறுவுதல்

விக்டோரியா சிறுவர் பூங்காவில் மின்சாரப் புகையிரதம் ஒன்றை நிறுவுவதற்கு 2011 ஆம் ஆண்டில் 8 சந்தர்ப்பங்களில் தனியார் கம்பனி ஒன்றிற்கு ரூபா 36,341,250 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) இச் செயற்திட்டத்திற்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமானம் 03 க்கமைய அல்லது மத்திய மாகாண சபையின் நிதிசார் விதி 04 க்கமையவோ முறையான அங்கீகாரமளிக்கும் நடவடிக்கைகள் கடைப்பிடிக்கப்படவில்லை.

(ஆ) இச் செயற்திட்டத்திற்கு 2011 ஜுன் 07 ஆந் திகதிய புதினப் பத்திரிகைகள் மூலம் கூறு விலைகள் கோரப்பட்டு, ஒப்பந்தகாரர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டு, 2011 ஜுலை 28 அன்று உடன்படிக்கை செய்து கொண்டபோதும், 2011 ஆகஸ்ட் 1 ஆந் திகதியன்றே செயற்திட்ட அறிக்கையை சபை அங்கீகரித்திருந்தது.

(இ) இச் செயற்திட்டத்திற்கு மாநகர சபைகள் அதிகாரச் சட்டத்தின் 40 (அ) பிரிவின் பிரகாரம் அமைச்சரின் அங்கீகாரம் பெறப்படவில்லை.